## மே – 29 – செவ்வாய்

### புனித சிறில்

### “முதன்மையானோர் பலர் கடைசியாவர், கடைசியானோர் முதன்மையாவோர்” (மாற்.10:31)

## முதல் வாசகம் : 1 பேதுரு 1 : 10 – 16

அன்புக்குரியவர்களே! உங்களுக்கென்றிருந்த அருளைப் பற்றிதான் இறைவாக்கினர் இறைவாக்குரைத்தனர் இந்த மீட்பைக் குறித்துத் துருவித் துருவி ஆய்ந்தனர். தங்களுக்குள் இருந்த கிறிஸ்துவின் ஆவி, கிறிஸ்து படவேண்டிய துன்பங்களையும் அவற்றுக்குப்பின் அடைய வேண்டிய மாட்சியையும் முன்னறிவித்தபோது, ஆவியால் குறிப்பிடப்பட்ட காலமும் சூழ்நிலையும் எவையென்று ஆராய்ந்தனர். அவர்களது பணி தங்கள் பொருட்டல்ல, உங்கள் பொருட்டே என்பது அவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டது. விண்ணினின்று அனுப்பப்பட்ட தூய ஆவியால் உங்களுக்கு நற்செய்தி அறிவித்தவர்கள், அவர்கள் முன்னறிவித்தவற்றை இப்போது உங்களுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். இவற்றை அறிந்து கொள்ள வானதூதர்களும் ஆவலோடிருந்தார்கள்.ஆகவே, உங்கள் மனம் செயலாற்றத் தயாராயிருக்கட்டும் அறிவுத் தெளிவு உடையவர்களாயிருங்கள். இயேசு கிறிஸ்து வெளிப்படும்பொழுது உங்களுக்கு அளிக்கப்படும் அருளை முழுமையாக எதிர்நோக்கி இருங்கள்.முன்னர் அறியாமையில் இருந்தபோது இச்சைகளுக்கிசைய நடந்தது போலன்றி, கீழ்ப்படிதலுள்ள மக்களாய் இருங்கள்.உங்களை அழைத்தவர் தூய்மையுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் உங்கள் நடத்தையிலெல்லாம் தூய்மையுள்ளவர்களாய் இருங்கள்.”நீங்கள் தூயவராயிருங்கள். ஏனெனில் நான் தூயவன்” என மறைநூலில் எழுதப்பட்டிருக்கிறது.

**பதில்பாடல் :** ஆண்டவர் தம் மிட்பை அறிவித்தார்.

## நற்செய்தி : மாற்கு10 : 28 - 31

அக்காலத்தில் பேதுரு அவரிடம், ”பாரும், நாங்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு உம்மைப் பின்பற்றியவர்களாயிற்றே” என்று சொன்னார்.அதற்கு இயேசு, ”உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன் என்பொருட்டும் நற்செய்தியின் பொருட்டும் வீடுகளையோ, சகோதரர்களையோ, சகோதரிகளையோ, தாயையோ, தந்தையையோ, பிள்ளைகளையோ, நிலபுலன்களையோ விட்டுவிட்ட எவரும்இம்மையில் நூறுமடங்காக வீடுகளையும் சகோதரர்களையும் சகோதரிகளையும் தாயையும் நிலபுலன்களையும், இவற்றோடு கூட இன்னல்களையும் மறுமையில் நிலைவாழ்வையும் பெறாமல் போகார். முதன்மையானோர் பலர் கடைசி ஆவர் கடைசியானோர் முதன்மை ஆவர்” என்றார்.

**தியானம் :** இறைவனுக்கு ஏற்புடைய மக்களாய் நாம் வாழ நம் வாழ்வில் எவ்வாறான மாற்றங்களை செய்ய வேண்டும் என்பதை இன்றைவார்த்தைப் பகுதிகள் எமக்குத் தெளிவுபடுத்துகின்றன. என்பொருட்டு வீடுகளையோ, சகோதரங்களையோ, தாயையோ. தந்தையையோ நிலபுலன்களையோ விட்டுவிட்டு எவரும் தமக்காக நாம் எதைத் துறந்தாலும் இவ்வுலகிலேயே பலமடங்கு நன்மைகளும், மேல் உலகில் முடிவில்லா இன்ப வாழ்வையும் பெறுவது உறுதி என்பதை இறைமகன் இயேசு வெளிப்படுத்துகின்றார். தீய நாட்டங்களை விட்டு விலகி நம் வழிகாட்டியாகிய இயேசுவைப் போல் நாம் வாழ அழைக்கப்படுகின்றோம். உங்களை அழைத்தவர் தூய்மை உள்ளவராய் இருப்பது போல் நீங்களும் உங்கள் நடத்தையிலெல்லாம் தூய்மையுள்ளவர்களாய் இருங்கள். (1பேது. 1:15) ஆகவே நம் வாழ்வில் எந்த மாற்றங்களை செய்ய வேண்டும் என்று எண்ணிப்பார்ப்போம், நம்மை நாமே ஏற்றுக் கொள்வோம், கடவுள் விருப்பத்தை நிறைவேற்ற தயாராக இருப்போம். முதன்மையானோர் கடைசியாவர் கடைசியானோர் முதன்மையாவர் என்று இயேசு கூறுகின்றார். தங்கள் கடின உழைப்பாலும், இறையருளாலும் நம்மைவிட வாழ்வில் முன்னேறுபவர்களைக் கண்டு பொறாமைப்படாமல் அவர்களது வளர்ச்சியைப் போற்றுவோம், அவர்களோடு மகிழ்வோம் இறைச்சித்தம் மணணுலகிலும் நிறைவேற உளமார மன்றாடுவோம்.